**புத்தளம் மாநகர சபை - 2024**
**---------------------------------------------------**

புத்தளம் மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையின் காண்பிக்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

**1.3 புத்தளம் மாநகர சபையை ஸ்தாபித்தல் மற்றும் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2022 செப்தெம்பர் 06 ஆந் திகதிய இலக்கம் 2296/05 என்ற அதிவிசேட வர்த்தமானியின் மூலம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் விடயப் பொறுப்பு அமைச்சரால் 2023 மார்ச் 19 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் புத்தளம் நகர சபை கலைக்கப்பட்டு 2023 மார்ச் 20 ஆந் திகதி முதல் புத்தளம் மாநகர சபை ஸ்தாபித்து அந்த திகதி உறுப்பினர்களின் பதவிக் காலம் செயற்படுகின்ற திகதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதாவது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்துரைத்து உறுப்பினர்களின் எண்ணிக்கை தெரிவு செய்ய முடியாதிருந்த போதிலும் சபை அத்திகதியின் போது ஸ்தாபிக்கப்படுவதாக கருத்தில் கொள்ளுதல் வேண்டும். எனினும் தொடர்ந்தும் புத்தளம் நகர சபையின் பெயரில் நிர்வாக நடவடிக்கைகள் பேணிச் செல்லபடுவதுடன் மாநகர சபையினால் 2023 மற்றும் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரித்து இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| i. | நிதிப்பிரமாணம் 104 | மாநகர சபையினால் பராமரிப்பு மற்றும் நிர்வகிக்கப்படுகின்ற பாய்ஸ் புதிய கேட்போர் கூடத்தின் கூரைக்கு ஏற்பட்டிருந்த பாதிப்பு தொடர்பாக பரீட்சித்து இழப்பு மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | இது இயற்கை காரணங்களினால் ஏற்பட்ட நட்டம் ஆகும். மதிப்பீடு செய்தல் மற்றும் பழுது பார்ப்பதற்கான மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய கட்டிடங்கள் திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளதுடன் அதற்குரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | இழப்பு தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | நிதிப்பிரமாணம் 104(3) | மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான இரண்டு வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக முழுமையான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | வாகனங்கள் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கை பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகன விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii. | நிதிப்பிரமாணம் 110 | இழப்பு மற்றும் நட்ட அறிக்கைகளுக்காக இழப்பு நட்டப் பதிவேடு காணப்பட்ட போதும் அந்த பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | சட்ட இழப்புப் பதிவேட்டை நானது வரையாக்குவதற்கு தேவையான ஆலோசனைகள் தற்போது வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iv. | நிதிப்பிரமாணம் 571(2) | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 5,013,516 ஆன வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நிதிக் குழுவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| v. | நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டின் இறுதியில் | பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுட | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ன் அதற்குரிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படம். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான நிர்வாகம்

#### 2.1.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானமான மூலம் | 2024<br>மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2023<br>மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| i. | ஆதன வரியும் வரியும் | 23,572 | 22,870 | 30,017 | 92,342 | 17,944 | 23,294 | 8,864 | 99,914 |
| ii. | வாடகை | 157,994 | 74,979 | 69,005 | 17,552 | 152,953 | 62,091 | 57,456 | 11,578 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,792 | 1,532 | 1,532 | - | 1,880 | 1,434 | 1,434 | - |
| iv. | ஏனைய வருமானம் | 40,560 | 13,442 | 13,442 | - | 53,550 | 12,530 | 12,530 | - |
| | மொத்தம் | 223,918 | 112,823 | 113,996 | 109,894 | 226,327 | 99,349 | 80,284 | 111,492 |

#### 2.1.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்**<br>மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி மற்றும் வரி நிலுவை ரூபா 92,341,553 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் ரூபா 78,191,819 அதாவது 85 சதவீதம் அளவில் முன்னைய ஆண்டுக்குரிய நிலுவைப் பணம் ஆகும். அவ்வாறே மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 37 சதவீதமும், | ரூபா 9,985,874 நிலுவை வருமானம் தற்போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி ஆதனவரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வருமானத்தில் 22 சதவீதமும் ஆன பிரகாரம் ஆதனவரி மற்றும் வரி சேகரித்தல் செயல் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | | |

**(ஆ) வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வாடகை மீதி ரூபா 17,551,551 ஆக இருந்ததுடன் அப் பெறுமதியில் ரூபா 2,035,709 முன்னைய ஆண்டுகளுக்கு உரிய நிலுவை மீதி ஆகும். மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வாடகைப் பெறுமதியில் 21 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய நிலுவை வாடகையை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 சனவரி 10 ஆந் திகதிய இலக்கம் 2019/02 என்ற உள்ளூராட்சி ஆணையாளரின் (வடமேல்) சுற்றறிக்கையின் இலக்கம் 04 மற்றும் 06 பந்திக்கு இணங்க மதிப்பீடு மற்றும் உடன்படிக்கை இன்றி சபைக்குச் சொந்தமான 30 மீன் கடைகள் ரூபா 900 மாதாந்த வாடகையில் வழங்கப்பட்டிருந்தது. | தற்போது சபை தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்ட தொகை அறவிடப்படுவதுடன் இந்த கடை வாடகை தொடர்பாக குழு ஒன்றின் மூலம் தொகையினைத் தீர்மானித்து அறவிடுவதற்கு ஆயத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் தேர்தல் காலம் ஆனமையால் தீர்மானம் எடுக்காமல் உறுப்பினர்கள் சபைக்கு அனுப்பி தேவையான தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்ட குருநாகல் வீதியில் அமைந்துள்ள 29 கடைகளின் உடன்படிக்கைக் காலம் கடந்து 01 வருடம் முதல் 25 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையை புதுப்பிப்பதற்காக உரிய கடை உரிமையாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையை நாளது வரையாக்கி திருத்தப்பட்ட வாடகை அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனவரி மீள்திருத்தம் செய்ய வேண்டியிருந்த போதிலும் நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு இதுவரை ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | உடன்படிக்கையை நாளதுவரையாக்கி திருத்தப்பட்ட வாடகை அறவிடப்படல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் ரூபா 337,750,000 தொகையை உடன்படிக்கை செய்யப்பட்ட எல்பா சந்தைத் தொகுதியின் நிர்மாண ஒப்பந்தம் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் முற்பணம் அறவிடாமையினால் ஏற்பட்டிருந்த நிதி நெருக்கடியின் காரணமாக 2019 ஆம் ஆண்டு வரை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. மீண்டும் 2019 ஒக்தோபர் 10 ஆம் திகதி ரூபா 437,500,000 பெறுமதி மற்றும் 540 நாள் காலத்துடன் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 515,304,094 ஆன நிர்மாணத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் சந்தைத் தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரருக்கு உரிய பிரகாரம் பட்டியல்கள் செலுத்துவதற்கு முடியாமையின் காரணமாக ரூபா 3,558,259 தாமதக் கட்டணமும் மாநகர சபைக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | ஆலோசனை பொறியியலாளர் கேட்டு விலகியமை, காலம் நீடிப்பதற்கு பரிந்துரை வழங்கப்படாமையின் காரணமாக நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டதுடன் தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட வருமானங்களை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கடைகளை கொள்வனவு நபர்களிடம் இருந்து அறவிடப்பட்ட முற்பணத்தைப் பயன்படுத்தி நேர் ஊழிய அடிப்படையின் கீழ் நிர்மானிப்பதற்கு ரூபா 190,983,806 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 74 கடைகளை உடைய பீட்டா சந்தைத் தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் 2022 திசெம்பர் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட பிரகாரம் கடைகள் விற்பனை செய்யப்படாமை, முற்பணம் அறவிடப்படாமையின் காரணமாக 2023 ஒக்தோபர் 31 ஆந் திகதி முதல் உரிய நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்தது. அத்திகதி வரையில் ரூபா 17,135,361 செலவினம் செய்து அத்திவாரம் வரை மாத்திரம் வேலை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | நேர் ஊழிய முறையின் கீழ் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு பிரச்சனைகள் எழுந்தமையால் உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் கீழ் பெறுகை செயற்பாடுகளின் பிரகாரம் ஒப்பந்தகாரரை தெரிவு செய்து செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட வருமானங்களை உழைப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபை அலுவலகம் அமைந்துள்ள காணி, மாநகர சபையினால் உரிமை கோராடப்படுகின்ற, நிர்வகிக்கப்படுகின்ற மற்றும் பராமரிக்கப்படுகின்ற சனசமூக மண்டபங்கள், வாராந்த சந்தை, நூலகம், சிறுவர் பூங்காக்கள், சிகிச்சை நிலையங்கள், சந்தைத் தொகுதிகள், நகர மண்டபங்கள் போன்ற ஆதனங்கள் அமைந்துள்ள காணி மற்றும் மயான நிலங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற 50 சொத்துக்களின் சட்ட ரீதியான உரித்து மாநகர சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சகல காணிகளையும் கையேற்பதற்காக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையில் இரண்டாம் தரத்தில் 40 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இரண்டாம் நிலையின் பதவிகளான தொழில்நுட்ப உத்தியோகத்தர், வருமானப் பரிசோதகர் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் போன்ற பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் காரணமாக அந்தப் பதவிகளின் கடமைகளை மேவுகை செய்வதற்காக ஆரம்ப தரத்தின் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | இந்த வெற்றிடங்களினால் நகர சபையின் வேலை நடவடிக்கைகள் அமைய தொழிலாளர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்படுவதுடன் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பிரதான செயலாளருடன் கலந்துரையாடி தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புதவற்கு நடவடிக்கை எடுத்து மாநகர சபை நடவடிக்கைகளை முறைப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | மரணமடைந்த மற்றும் சேவையை விட்டுச் சென்றதன் காரணமாக 11 ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 156,826 கடன் மீதி மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன் மீதியைப் பதிவளிப்பதற்கான அங்கீகாரத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு ஒவ்வொரு முறையும் உட்சாகம் எடுக்க வேண்டி இருந்ததுடன் பின்னர் பதிவளித்தல் தீர்மானத்திற்கு வருதல் வேண்டும். |

### 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விற்றுத் தீர்ப்பதற்குப் பதிலாக பரிந்துரை செய்யப்பட்டிருந்த 03 மோட்டார் சைக்கிள்கள், டெக்டர் வண்டி மற்றும் டேலர் என்பவற்றை விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்காமல் 06 வருடங்களுக்கும் 11 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் இந்த சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் 04 டெக்டர் டெய்லர்கள் பழுது பார்த்து பயன்படுத்த முடியாமல் வேலைத் | 2024 இன் பொருள் மெய்மையாய்வு பரிந்துரையின் அடிப்படையில் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் வேலைத்தளத்தில் பழுது பார்த்தல் பிரிவின் பணிகள் செயலிழந்தமையால் அந்த 04 டெக்டர் டெய்லர்களை பழுது பார்க்கும் நடவடிக்கைகள் தாமதமடைந்ததுடன் அடுத்து | பரிந்துரை செய்யப்பட்டதன் பிரகாரம் வாகனங்களை விற்குத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தளத்தில் துரப்பிடிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | வரும் சபைக் கூட்டத்தில் இது தொடர்பாக அறிவித்து உரிய பழுது பார்த்தல் நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையினை உரிய பிரகாரம் இனங்காணாமல் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் பாதீடு செய்யப்பட்ட பணிகளை திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றாமையின் காரணமாக 51 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 256,115,000 நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் சபைக் கூட்டத்தின் போது இது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பாதீட்டின் மூலம் பணிகளை திட்டமிடப்பட்ட பிரகாரம் ஆண்டில் நிறைவேற்றுதல் வேண்டும். |

**4.2 சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைக்குச் சொந்தமான கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் ஒன்று காணப்படுவதுடன் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற துண்டுக் கழிவுகளை வகைப்படுத்தாமல் பெற்று கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. துண்டு கழிவுப் பொருட்களை பிரிப்பதற்காக இருக்கின்ற தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக சேகரிக்கப்படுகின்ற உக்குகின்ற கழிவுக் கூறுகளை மேற்கொள்கின்ற சேதனப்பசளை உற்பத்தி வரையறுக்கப்பட்டதுடன் பௌதீகக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் கணிசமான கழிவுப் பொருள் மலை ஒன்று உருவாகி விலங்குகள் அவற்றிக் உணவுக்காக பயன்படுத்துகின்றமை அவதானிக்கப்பட்டது. | கழிவுகளை வகைப்படுத்துவதற்காக போதியளவான தொழிலாளர் தரப்பினை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பாக புதிய சபைக்கு விடயங்கள் சமர்ப்பித்து உரிய தீர்வினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான கழிவுப் பொருள் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இற்காக அடைந்து கொள்ளப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்காக மாநகர சபையினால் மீளாய்வாண்டில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 05 இற்காக இலக்குகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதில் ஒரு நோக்கம் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இனங்காணப்பட்ட இலக்குனளை அமுல்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |